## வகுப்பு - 8 - தாவரவியல்,     5 - வகைப்பாட்டியலின் அடிப்படைகள்

**பயிற்சி வினாக்கள்:**

1. புவியில் காணப்படும் சிற்றினங்களின் எண்ணிக்கை ஏறத்தாழ ______.

   (1) 8.7 மில்லியன்   (2) 8.6 மில்லியன்   (3) 8.5 மில்லியன்   (4) 8.8 மில்லியன்

2. ஐந்துலக வகைப்பாடு யாரால் முன்மொழியப்பட்டது?

   (1) அரிஸ்டாட்டில்   (2) லின்னேயஸ்   (3) விட்டேக்கர்   (4) பிளாட்டோ

3. புறாவின் இருசொல் பெயர் ________

   (1) ஹோமோ சேப்பியன்ஸ்   (2) ராட்டஸ் ராட்டஸ்

   (3) மாஞ்சிபெரா இண்டிகா   (4) கொலம்பா லிவியா

4. உயிரி வகைப்பாட்டில் மிகப்பெரிய பிரிவு எது?

   (1) வரிசை   (2) உலகம்   (3) தொகுதி   (4) குடும்பம்

5. உயிரின வகைப்பாட்டின் சரியான வரிசையை கண்டுபிடி

   (1) உலகம், வரிசை, குடும்பம், வரிசை, தொகுதி, பேரினம், சிற்றினம்.

   (2) உலகம், தொகுதி, வகுப்பு, வரிசை, குடும்பம், பேரினம், சிற்றினம்.

   (3) உலகம், வகுப்பு, வரிசை, தொகுதி, குடும்பம், பேரினம், சிற்றினம்.

   (4) உலகம், குடும்பம், வகுப்பு, வரிசை, தொகுதி, பேரினம், சிற்றினம்.

6. அரிஸ்டாட்டில் குறித்த எக்கருத்து தவறானது?

   (1) இவர் 2400 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஒரு கிரேக்கத் தத்துவ ஞானி.

   (2) இவர் அனைத்து உயிரினங்களையும் தாவரங்கள், விலங்குகள் என பிரித்தார்.

   (3) இவர் விலங்குகளை இரத்தம் உடைய விலங்குகள், இரத்தம் அற்ற விலங்குகள் என பிரித்தார்.

   (4) இவர் விலங்குகளை ஐந்து வகைகளாகப் பிரித்தார்.

7. பொருத்துக

   (a) மனிதன் - (i) *அல்லியம் சீபா*

   (b) வெங்காயம் - (ii) *ஒரைசா சட்டைவா*

   (c) வேப்பமரம் - (iii) *ஹோமோசேப்பியன்ஸ்*

   (d) நெல் - (iv) *அசாடிரேக்டா இண்டிகா*

   (1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii)   (2) (a) - (iii) (b) - (i) (c) - (iv) (d) - (ii)

   (3) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii)   (4) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

LIVEWORKSHEETS

8. இருசொல் பெயரிடும் முறையை அறிமுகப்படுத்தியவர் ________.

(1) கரோலஸ் லின்னேயஸ் (2) காஸ்பார்டு பாஹின்

(3) அரிஸ்டாட்டில் (4) சாக்கரடீஸ்

9. பொருத்துக

(a) இஞ்சி - (i) *காக்கஸ் நியூசிபெரா*

(b) தேங்காய் - (ii) *டேமரிண்டஸ் இண்டிகா*

(c) புளிய மரம் - (iii) *காரிகா பப்பாயா*

(d) பப்பாளி - (iv) *ஜிஞ்சிபர் அஃபிஸினேல்*

(1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii) (2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii) (4) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

10. பொருத்துக

(a) எலுமிச்சை - (i) *கட்லா கட்லா*

(b) தவளை - (ii) *சிட்ரஸ் ஆரேன்ஷியம்*

(c) மீன் - (iii) *ரானா ஹெக்சா டாக்டைலா*

(d) ஆரஞ்சு - (iv) *சிட்ரஸ் அருண்டிஃபோலியா*

(1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii) (2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii) (4) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

11. சரியான இணையைத் தேர்ந்தெடு.

(1) புறா - (i) *ரேட்டஸ் ரேட்டஸ்*

(2) நெல் - (ii) *காக்கஸ் நியூசிபெரா*

(3) பப்பாளி - (iii) *காரிகா பப்பாயா*

(4) தவளை - (iv) *கட்லா கட்லா*

12. தவறான இணையைத் தேர்ந்தெடு.

(1) பேரிச்சை - (i) *ஃபோனிக்ஸ் டாக்டைலிஃபெரா*

(2) ஆரஞ்சு - (ii) *சிட்ரஸ் அருண்டி ஃபோலியா*

(3) மனிதன் - (iii) *ஹோமோசேப்பியன்ஸ்*

(4) புறா - (iv) *கொலம்பா லிவியா*

13. (A): இரு சொல் பெயரிடும் முறையை அறிமுகப்படுத்தியவர் கரோலஸ் லின்னேயஸ்.

(B): இவர் வகைப்பாட்டியலின் தந்தை என அழைக்கப்படுகிறார்.

(1) (A), (B) இரண்டும் சரி (2) (A) சரி, (B) தவறு

LIVEWORKSHEETS

(3) (A) தவறு, (B) சரி    (4) (A), (B) இரண்டும் தவறு

14. விலங்குகள் உலகத்தில் மனிதன் எந்தப் பிரிவில் வைக்கப்பட்டுள்ளான்?

(1) ஊர்வன    (2) இருவாழ்விகள்    (3) பாலூட்டிகள்    (4) நடப்பன

15. தாவர உலகின் இருவாழ்விகள் என அழைக்கப்படுவது ______.

(1) மாஸ்கள்    (2) பெரணிகள்    (3) பாசிகள்    (4) ஜிம்னோஸ்பெர்ம்

16. பரிணாம வளர்ச்சி அடிப்படையில் முதலில் நிலத்தில் வாழத்தொடங்கிய தாவரங்கள் எவை?

(1) மாஸ்கள்    (2) பெரணிகள்    (3) பாசிகள்    (4) ஜிம்னோஸ்பெர்ம்

17. பொருத்துக

(a) அமீபா - (i) குழியுடலி

(b) லியூக்கோசொலினியா - (ii) புரோட்டோசோவா

(c) ஹைட்ரா - (iii) தட்டைப் புழு

(d) கல்லீரல் புழு - (iv) துளையுடலி

(1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii)    (2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii)    (4) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

18. பொருத்துக

(a) அஸ்காரிஸ் லும்பிரிகாய்ட்ஸ் - (i) வளைத்தசை புழுவினம்

(b) மண்புழு - (ii) மெல்லுடலி

(c) நண்டு - (iii) உருளைப் புழுவினம்

(d) ஆக்டோபஸ் - (iv) கணுக்காலி

(1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii)    (2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (iii) (b) - (i) (c) - (iv) (d) - (ii)    (4) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

19. பொருத்துக

(a) குழியுடலி - (i) நெமடோடா

(b) துளையுடலி - (ii) பிளாட்டி ஹெல்மின்தஸ்

(c) தட்டைப் புழுக்கள் - (iii) பொரிபெரா

(d) உருளைப் புழுக்கள் - (iv) சீலெண்டிரேட்டா

(1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii)    (2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii)    (4) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

20. பொருத்துக

(a) வளைதசை புழு - (i) ஆர்த்ரோபோடா

LIVEWORKSHEETS

(b) கணுக்காலிகள் - (ii) மொலஸ்கா

(c) மெல்லுடலிகள் - (iii) எக்கைனோடெர்மேட்டா

(d) முட்தோலிகள் - (iv) அனலிடா

(1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii) (2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii) (4) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

21. பொருத்துக

(a) மீன்கள் - (i) ரெப்டைல்ஸ்

(b) இருவாழ்விகள் - (ii) ஏவ்ஸ்

(c) ஊர்வன - (iii) ஆம்பிபியா

(d) பறவைகள் - (iv) பிஸ்ஸஸ்

(1) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (iii) (2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii) (4) (a) - (iv) (b) - (iii) (c) - (i) (d) - (ii)

22. சரியான இணையைத் தேர்ந்தெடு

(1) ஆமை - இருவாழ்வி

(2) திமிங்கிலம் - மீன்

(3) நத்தை - ஊர்வன

(4) நட்சதிர மீன் - முட்தோலி

23. விலங்குகளின் வகைப்பாட்டின் அடிப்படையில் தனித்த ஒன்றினைக் கண்டுபிடி

(1) தவளை (2) ஆமை (3) சாலமண்டர் (4) சிசிலியன்

24. விலங்குகளின் வகைப்பாட்டின் அடிப்படையில் தனித்த ஒன்றினைக் கண்டுபிடி

(1) மனிதன் (2) வெளவால் (3) திமிங்கலம் (4) பிளாட்டிபஸ்

25. (A): பூஞ்சைகள் தற்சார்பு ஊட்ட உயிரிகளாகும்.

(B): ஈஸ்ட் என்பது ஒரு செல் பூஞ்சையாகும்.

(1) (A), (B) இரண்டும் சரி (2) (A) சரி, (B) தவறு

(3) (A) தவறு, (B) சரி (4) (A), (B) இரண்டும் தவறு

26. பொருத்துக

(a) மொனிரா - (i) யூக்ளினா

(b) புரோட்டிஸ்டா - (ii) பாக்டீரியா

(c) பூஞ்சை - (iii) வண்ணத்துப் பூச்சி

(d) அனிமாலியா - (iv) மோல்டுகள்

LIVEWORKSHEETS

(1) (a) - (ii) (b) - (i) (c) - (iv) (d) - (iii)

(2) (a) - (iv) (b) - (iii) (c) - (ii) (d) - (i)

(3) (a) - (iv) (b) - (i) (c) - (ii) (d) - (iii)

(4) (a) - (ii) (b) - (iv) (c) - (i) (d) - (ii)

27. தவறான ஒன்றைக் கண்டுபிடி

(1) ஜிம்னோஸ்பெர்ம்கள் உண்மையான வேர், தண்டு, இலை கொண்ட பல்லாண்டு வாழ் தாவரங்களாகும்.

(2) இவை வாஸ்குலர் கற்றைகள் உடையவை.

(3) விதைகள் சதைப்பற்றால் மூடி பாதுகாக்கப்படுகின்றன.

(4) பைனஸ், சைக்கஸ், ஜிம்னோர்ஸ்பெர்ம் இனத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

28. தவறான கூற்றினைக் கண்டுபிடி

(1) கணுக்காலிகள் தடித்த 'கைட்டின்' என்ற பொருளிலான புறச்சட்டகத்தைக் கொண்டுள்ளன.

(2) கணுக்காலிகள் ஆங்கிலத்தில் 'அன்னலிடா' என அழைக்கப்படுகின்றன.

(3) இணைக்கால்கள் மற்றும் இணையுறுப்புகள் உடையன

(4) மரவட்டை கணுக்காலிகளுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

29. (A): நெல் ஒருவித்திலை தாவரத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

(B): நெல்லின் அறிவியல் பெயர் ஒரைசா சட்டைவா ஆகும்.

(1) (A), (B) இரண்டும் சரி

(2) (A) சரி, (B) தவறு

(3) (A) தவறு, (B) சரி

(4) (A), (B) இரண்டும் தவறு

30. (i) தவளை ஓர் இருவாழ்வி ஆகும்.

(ii) தவளை ஒரு குளிர் இரத்த விலங்காகும்.

(iii) தவளை பாலிலா இனப்பெருக்கம் செய்யும் விலங்காகும்.

(iv) தவளையின் அறிவியல் பெயர் ரானாஹெக்சா டாக்டைலா

(1) (i), (ii) மற்றும் (iv) சரி

(2) (ii) மற்றும் (iv) சரி

(3) (iii) மற்றும் (iv) சரி

(4) (i) மற்றும் (iv) சரி

31. (i) பாலூட்டிகள் குட்டிபோட்டு பாலூட்டும் இயல்புடையவை.

(ii) திமிங்கலம் ஒரு பாலூட்டியாகும்.

(iii) பாலூட்டிகள் காதுமடல் மற்றும் தசைகளால் ஆன உதரவிதானம் பெற்றவை.

(iv) உட்கரு அற்ற இரத்த சிவப்பணுக்களைக் கொண்டுள்ளன.

(1) (i), (ii) மற்றும் (iv) சரி

(2) (ii) மற்றும் (iv) சரி

(3) (iii) மற்றும் (iv) சரி

(4) அனைத்தும் சரி

32. மெல்லுடலிகள் குறித்த பின்வரும் கூற்றுகளில் தவறானது எது என கண்டுபிடி.

LIVEWORKSHEETS

(1) கால்சியத்தினால் ஆன ஓட்டைப் பெற்றுள்ளன.

(2) தலைப்பகுதி மற்றும் பாதப்பகுதி மெல்லிய தசைகளால் ஆக்கப்பட்டுள்ளன.

(3) பாலினப்பெருக்கம் முறையில் இனப்பெருக்கம் செய்கின்றன.

(4) மெல்லிய கண்டங்கள் உடல் முழுவதும் காணப்படுகின்றன.

33. கூற்று (A): அடையாளங்காணுதல், வகைப்படுத்துதல், தொகுத்தல் ஆகியவை வகைப்பாட்டியலில் அவசியமானவை.

காரணம் (R): இவை வகைப்பாட்டியலின் அடிப்படைப் படிநிலை

(1) (A), (R) இரண்டும் சரி. (R) என்பது (A)க்கான விளக்கம்.

(2) (A), (R) இரண்டும் சரி. (R) என்பது (A)க்கான விளக்கம் அன்று.

(3) (A) சரி, (R) தவறு

(4) (A) தவறு, (R) சரி

34. தவறான இணையைக் கண்டுபிடி

(1) மொனிரா - ஒரு செல் உயினம்

(2) அகாரிகஸ் - ஒரு பூஞ்சை

(3) அஸ்காரிஸ் லும்பிரிக்காய்ட்ஸ் - ஒரு தட்டை புழுவினத்தைச் சேர்ந்த உயிரி.

(4) ஸ்பைரோகைரா - ஒரு பல செல் பாசி

35. (A): பூவாத் தாவரங்கள் ஒரு வித்திலை மற்றும் இரு வித்திலை தாவரங்கள் என இரு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன.

(B): பூவாத் தாவரங்கள் சதைப்பற்றுள்ள கனிகளை உருவாக்குகின்றன.

(1) (A), (B) இரண்டும் சரி
(2) (A) சரி, (B) தவறு
(3) (A) தவறு, (B) சரி
(4) (A), (B) இரண்டும் தவறு

LIVEWORKSHEETS